
## கிறிஸ்துவின் சரீரமாகிய சபை

**நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (1 கொரி 12:27)**




அப்போஸ்தலராகிய பவுல் **எபேசியர் 5:23** இல் **“கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல“** என்று குறிப்பிடுகிறார். ஆம் சபையாகிய சரீரத்திற்கு தலை கிறிஸ்துவே. அப்படிப்பட்ட சரீரமாகிய சபை எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்பதையே அப்போஸ்தலனாகிய பவுல் **1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில்** விளக்கியுள்ளார். அவற்றை நாம் ஒவ்வொன்றாய் தியானிப்போமாக.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்களாய் (அவயவங்களாய்) இருக்கிற ஒவ்வொருவர் பற்றியும் ஆண்டவருக்கு ஓர் திட்டம் உண்டு. ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் அருளிய கிருபைகளும், வரங்களும், அழைப்பும், வித்தியாசமானது. இங்கு பவுல் கொரிந்து சபையை பற்றி மட்டும் கூறவில்லை. உலகளாவிய கிறிஸ்துவின் சபையை பற்றியே பேசுகிறார். **1 கொரிந்தியர் 12:13** கூறுகிறது **“நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். “**. இப்படியாக, இவ்வுலக பிரகாரமாகவே பல்வேறு கண்டங்களில், பல்வேறு நாடுகளில், பல்வேறு கலாச்சார பிண்ணணியில், வாழ்க்கை முறையில், பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் கூட்டமானாலும், அவர்கள் அனைவரும் தலையாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாய் உள்ளனர். இவ்வுலகில் அவர்கள் வாழும் வாழ்க்கை சூழ்நிலைகள்

வித்தியாசமாய் இருந்தாலும், அனைவரும் கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாகவே உள்ளனர். ஆம் தலையாகிய கிறிஸ்து எதை சிந்திக்கிறாரோ அதை செயல்படுத்தும் கருவிகளாக (அங்கங்களாகவே) சபையாகிய நாம் ஒவ்வொருவரும் உள்ளோம்.

**1 கொரிந்தியர் 12:12** கூறுகிறது, **"எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்."**. இங்கு அவயவங்கள் அனேகமாக இருந்தாலும், அவற்றின் செயல்பாடு, உருவம், வித்தியாசமாய் இருந்தாலும், அவையெல்லாம் சேர்ந்து ஒரே சரீரமாக பார்க்கப்படும் பொழுது, ஒன்றாக ஒரே வேலையை இசைந்து செய்யக்கூடியதாய் உள்ளது. ஒவ்வொரு அவயவமும் தான் எதற்காக சரீரத்தின் அவயவமாய் இருக்கிறதோ, அதற்கான வேலையை செய்வதுபோல், சபையின் ஒவ்வொரு அங்கமும், தன்னை பற்றிய தேவ திட்டத்தை உணர்ந்து, சபையில் தான் செய்ய வேண்டிய வேலையை பொறுப்புடன் செய்ய வேண்டும். **1 கொரிந்தியர் 12:14** கூறுகிறது, **"சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது."**. ஆம் சரீரத்திற்கு எவ்வாறு பல்வேறு அங்கங்கள் தேவைப்படுகிறதோ, சபைக்கு பல்வேறு ஊழியங்களை நிறைவேற்ற, பல்வேறு வரங்களை பெற்றவர்கள் தேவைப்படுகின்றனர். **1 கொரிந்தியர் 12:18** கூறுகிறது, **"தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்."**. தேவன் தமது சித்தத்தின்படியே அவயவங்கள் ஒவ்வொன்றையும், எவ்வாறு சரீரத்தில் ஒவ்வொரு பணிக்கென வைத்திருக்கிறாரோ, அதைப்போலவே சபையாகிய சரீரத்திலும், அவயவங்களான நம் ஒவ்வொருவரையும் பிரத்தியேகப் பணிக்கென நியமித்திருக்கிறார். எனவே இப்படிப்பட்டதான சபை எப்படி இருக்க வேண்டும் என்பதையும் கீழ்காணும் வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

### (1) தனக்கு கொடுக்கப்பட்ட பணியை ஏற்றுக்கொள்ள வேண்டும்:

**"காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ?", (1 கொரிந்தியர் 12:15,16)**, போன்ற வார்த்தையானது சபையின் அங்கமாய் இருக்கக்கூடிய எவரும், தான் எந்த நிலையில் அழைக்கப்பட்டிருக்கிறாறோ, அதை தேவ சித்தமாக, திட்டமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை விட்டு, அதைவிட மற்றது தான் பெரியது என்று

எண்ணாமல், தான் எப்படிப்பட்ட அவயவமாய் சரீரத்தில் இருந்தாலும், எந்த வேலையை செய்ய அது சரீரத்தில் இருக்கிறதோ, அதை செய்ய வேண்டும். ஆனால் இன்றோ பலர், பிரபலமாய் இருப்பதையும், அனேக மக்கள் நடுவில் ஊழியம் செய்வதையுமே, பெரியதாக எண்ணுகின்றனர். நமது ஆண்டவரோ, மக்கள் ஒருவரை ஒருவர் மிதிக்கத்தக்கதாய், கூட்டமாய் வந்தவரிடமும் பிரசிங்கத்தார், அற்புதம் செய்தார். அதே நேரத்தில் அவர் தனி நபர்களையும் தேடிச்சென்று இரட்சித்து, விடுதலை ஆக்கினார். உதாரணமாக, சகேயு, யவீருவின் மகள், நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், லாசரு, சமாரிய ஸ்திரீ என்று வேதாகமத்தில் பல தனி நபர்களுக்காகவும் ஆண்டவர் செயல்பட்டார். மேலும் சரீரத்தில் அங்கமாய் இருப்பதை மேன்மையாக எண்ணி வாழ்வோர், நிச்சயமாக தாம் எப்படிப்பட்ட அங்கமாக இருந்தாலும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வர்.

### (2) உயர்வு தாழ்வு பாராமல் இணைந்து பணி செய்தல் வேண்டும்:

**1 கொரிந்தியர் 12:21** கூறுகிறது, **"கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது."**. ஆம் சபையில் உள்ள எந்த ஊழியமும், ஏற்றத்தாழ்வின்றி, இணைந்து செயல்பட வேண்டும். அதை விட்டு, தான் செய்யும் செயல் தான் பெரியது என்று எண்ணி மற்றவற்றை தாழ்வாக நினைத்தால் கூடாது. **1 கொரிந்தியர் 12:22** கூறுகிறது, **"சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது."**. ஆம் பார்ப்பதற்கு சிலர் செய்யும் காரியம் சிறியதாக தோன்றலாம், ஆனால் அவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக உள்ளது. மேலும் ஆண்டவர் தமது பணியினை செய்வோரின் உள்ளத்தை பார்க்கிறாரேயொழிய, அவர்கள் செய்யும் அளவை அல்ல. அதனால்தான் ஏழை விதவை காணிக்கை பெட்டியில் போட்ட இரண்டு காசை ஆண்டவர் மேன்மையாக எண்ணினார்.

### 3. ஒருவருக்கொருவர் அக்கறை கொள்ள வேண்டும்:

**1 கொரிந்தியர் 12:25** கூறுகிறது, **"சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார்."**. இங்கு ஆண்டவர் விரும்புவதெல்லாம், சரீரத்தில் எந்தவித பிரிவினை இருக்கக் கூடாது என்பதே. ஆம் ஆண்டவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலர்களுக்காக, பிதாவிடம் வேண்டிக் கொண்ட பொழுது கூட, அவர்கள் ஒன்றாக இருக்க

வேண்டும் என்பதையே விரும்பினார். இன்று சபையிலும் அப்படியே இருக்க ஆண்டவர் விரும்புகிறார். **ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு,** என்பது அவரவர் அவருடைய வேலையை பார்ப்பதல்ல, தேவனுடைய அனாதித் திட்டத்தின் பணி எவ்வித தடையும் இல்லாமல் நடைபெறும் படியாய், ஏதாவது ஒரு அங்கம் / பணி பாதிக்கப்படும் பொழுது, மற்ற அங்கங்கள் அந்த தடைப்பட்ட பணி தொடர்ந்து நடைபெற உதவ வேண்டும். உதாரணமாக சுவிசேஷப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற சபை ஊழியங்கள் அவற்றை தாங்க வேண்டும். ஏனெனில் சுவிசேஷ ஊழியம் தடைப்பட்டால் அது சபையின் வளர்ச்சியை பாதிக்கும்.

மேலும் **1 கொரிந்தியர் 12:26** கூறுகிறது, **"ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்."**. ஆம், கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றும், பாடுகளானாலும் சரி, மகிமையானாலும் சரி, அவற்றை இணைந்தே அனுபவிக்க அழைக்கப்பட்டது. ஆனால் ஆதி அப்போஸ்த காலத்தில் இருந்தே சபையில் வேற்றுமைகள் இருந்தன. அவற்றை சரி செய்வதை, நாம் பவுலின் நிருபங்களிலும் மற்றும் மற்ற அப்போஸ்தலர்களின் நிருபங்களிலும் காணலாம். இன்றும் இப்படிப்பட்ட காரியங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சரி செய்யப்பட வேண்டும். அன்று வறுமையில், பஞ்சத்தில் இருந்த சபைகளுக்கு உதவ, அப்போஸ்தலராகிய பவுலே பிற சபைகளில் இருந்து தரும பணத்தை சேகரித்து, அதை தேவைப்படும் சபைகளுக்கு அனுப்பினார். இப்படியாக ஒருவரை குறித்து மற்றொருவர் அக்கறைப்படவும், அதற்கான காரியங்களை செயல்படுத்தவும் ஆண்டவர் விரும்புகிறார்.

**அப்போஸ்தலர் 2:44,45** இல், **"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள்."**. ஆதி அப்போஸ்தல காலத்திலிருந்தே, சரீரமாகிய சபையானது சகலத்தையும் பொதுவாக வைத்து அனைவரும் பயன்பெறும் படியாய் செயல்பட்டது. அதனால் தான் அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் வாழ முடிந்தது (**அப்போஸ்தலர் 2:46**). அந்த ஒரு மனம் கிறிஸ்துவின் சிந்தையை பிரதிபலித்தது. இன்றும் ஆண்டவர் இப்படிப்பட்ட சபையையே தம் வருகையில் எதிர்பார்த்து கொண்டிருக்கிறார். எனவே கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாய் உள்ள நாம்

ஒவ்வொருவரும், மேற்கண்ட வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடி, அதே நேரத்தில் சக அங்கங்களாயிருக்கிற மற்றவர் மீதும் அக்கறை உள்ளவர்களாய், அவர்கள் குறைச்சலில் உதவி, அவர்கள் தேவைகளை சந்தித்து, அவர்களும் கிறிஸ்துவின் சித்தத்தை / திட்டத்தை நிறைவேற்ற உறுதுணையாய் இருந்து, ஒரே சரீரமாய் கிறிஸ்துவாகிய தலையோடு என்றென்றும் ஒரே சிந்தையாய் இணைந்திருப்போமாக. ஆமென், அல்லேலூயா.